வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 33/2023

வழக்கு சாட்சி LW1 /PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லட்சுமி | ஜாதி | |
| கணவர்/தந்தை | அர்ஜுனன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 55 |

தேதி 05.02.2025

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மணலியில் குடியிருந்து வருகிறேன். 29.09.2022 அன்று மாதவரத்தில் பால்பண்ணையில் பால் வாங்க சென்ற எனது கணவர்மீது எதிரே வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து தலையில் காயம் ஏற்பட்டது. அப்போது மதியம் 2 மணியிருக்கும். அவரை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். பின்னர் 3.10.2022 அன்று சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனக்கு அங்கிருந்தவர்கள் தகவல் சொன்னதால் மருத்துவமனை சென்று எனது கணவரை பார்த்தேன். அப்போது போலீசார் என்னிடம் புகாரினை பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரானது நான் அளித்ததுதான். மேற்படி புகாரானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் ஆஜர் ஆகியும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணையானது முடிக்கப்பட்டது.